# C.S.I TAMIL CHURCH - OMAN

# “பாலைவன மன்னா”




“நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன”. – யோவேல் 2 : 28”

மன்னா – **9** ஜுன் 2019 பிரதி – **3**

## செயலர் மடல்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்களாகிய உங்கள் அனைவரையும் அன்போடு வாழ்த்துகின்றேன். கர்த்தருடைய கிருபையினாலும் ஆசீர்வாதத்தினாலும் கடந்த மே மாதம் முழுவதையும் கடந்து வந்தோம். புதிய மாதத்திற்குள் பிரவேசித்திருக்கிறோம். இந்த மாதம் நமக்கு ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் இரக்கம் செய்வாராக.

**போதகர்:**

நமது சபையில் 4 ஆண்டுகளாக ஊழியம் செய்த நமது போதகர் Rev. K. கிளாட்ஸ்டன் அவர்கள் கடந்த மாதம் 29-ம் தேதி தாயகம் திரும்பினார்கள். குமரிப் பேராயத்தில் செவரக்கோடு பாஸ்டரேட் திருச்சபையில் இந்த மாதம் 1-ம் தேதி முதல் பணி பொறுப்பேற்றிருக்கிறார்கள். அவர்களது ஊழியம் அங்கு சிறப்பானதாக அமைய ஜெபியுங்கள். கடந்த 24-ம் தேதி நடைபெற்ற போதகரின் பிரிவுபசாரவிழா சிறப்பாக நடைபெற்றது. போதகரை கனப்படுத்திய உங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நமது சபையின் புதிய போதகராக Rev. Dr. N. ஜெசின் M.A., B.D., M.Th.,M.phil.,D.C.S.,PhD அவர்கள் பேராயரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு திருமதி. D.ஷெர்மிளா என்ற மனைவியும். J. பென் ஸ்டேன்ஸ் என்ற மகனும் J. பீனா ஷெரின் என்ற மகளும் உண்டு. போதகரின் ஊழியம் நமது சபையின் வளர்ச்சிக்கு ஏற்றதாய் இருக்க ஆண்டவர் தயை செய்ய ஜெபிப்போம். போதகருடைய விசா விரைவில் கிடைக்க ஜெபியுங்கள்.

**கோடை விடுமுறை:**

பிள்ளைகளுக்கு கோடை விடுமுறை என்பதால் பலர் தாய் நாடு சென்றிருக்கிறார்கள். செல்ல இருக்கிறார்கள். அனைவருக்கும் விடுமுறை காலம் சந்தோஷமாய் அமைய ஆண்டவர் துணை செய்வாராக.

இவண்,<br>
சபை செயலர்<br>
திரு. சுஜித் கிளாட்சன்

---

## ஆயர் அருளுரை

### தூய ஆவியானவர் - கடவுளின் அருட்கொடை

நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன் (யோவேல் 2:28).

### பெந்தேகோஸ்தே:-

திருச்சபையாக நாம் கொண்டாடும் திருநாட்களில் மிகவும் முக்கியத்துவம் பெற்ற திருநாள் பெந்தேகோஸ்தே என்பதாகும். பெந்தேகோஸ்தே திருநாள் - தூய ஆவியாரால் பொழியப்பட்ட நாள். பல மொழி, பல நாட்டு மக்களைக் கிறிஸ்துவின் திரு உடலாக – ஒரே உடலாக இணைத்த திருநாள். கிறிஸ்தவத் திருச்சபையின் பிறந்தநாள். கிறிஸ்துவின் ஊனுடல் பிறந்தநாள் கிறிஸ்மஸ் எனில், கிறிஸ்துவின் ஆன்மீக உடலாகிய திருச்சபை பிறந்தநாள் பெந்தேகோஸ்தே. எனவே நாம் இதனை சிறப்பாகக் கொண்டாடவேண்டும்.

## பெந்தேகோஸ்தே – சொற்பொருள்:-

“பெந்தேகோஸ்தே” என்னும் சொல்லுக்கு “ஐம்பதாவது நாள்” என்பது பொருள். இது அறுவடைக்காக நன்றிச் செலுத்தும் யூதத் திருவிழா. பஸ்கா திருவிழாவுக்குப்பின் ஐம்பதாவது நாள் இது கொண்டாடப்படும்போது இயேசு உயிர்த்தெழுந்து ஐம்பது நாட்கள் கடந்து சீடர்கள் அனைவரும் ஒரே இடத்தில் கூடியிருந்தார்கள். அப்பொழுது திடீரென்று கடுங்காற்று வீசுவதுபோன்று ஓர் இரைச்சல் வானத்திலிருந்து உண்டாகிப் பெரும் அசைவை உண்டாக்கியது (அப். 2:1-3). அங்கு கூடியிருந்த அனைவரும் தூய ஆவியாரால் நிரப்பப்பட்டனர். இயேசுவே மீட்பர் என அறிந்துகொண்டனர். கிறிஸ்துவின் நற்செய்தியை உலகமெங்கும் பரப்பத் துணிவுகொண்டனர். தூய ஆவியாரை இறைவனின் அருட்கொடையாக மூன்று நிலைகளில் சிந்திப்போம்.

## 1. உடனிருக்கும் ஆவியானவர்:-

உலக வரலாற்றைப் பாதித்த மாபெரும் அருட்கொடைகளில் ஒன்று, ஒரு சிறுகூட்டத்தார் பெற்ற அருட்கொடையாம் தூயஆவியாராகும். பாடுகளின் வழியாக பாவத்தையும், இறப்பையும் வெற்றிக்கொண்ட ஆண்டவர் உடனிருக்கிறார் என்பதன் அடையாளம் தூய ஆவியார் ஆவார்.

இயேசு தமக்கும் சீடருக்கும் உள்ள உறவை திராட்சைச்செடி மற்றும் கொடியை உவமையாக குறிப்பிட்டுக் கூறினார். தமது அன்பிலே நிலைத்திருக்கவும், ஒருவரிலொருவர் அன்புகூரவும் கட்டளையிட்டார் (யோவான் 15:1-14). உலகம் சீடர்களை நேசிக்காமல் இன்னல் தந்தாலும் இறைஉறவில் நிலைத்து நிற்க கற்பித்தார் (யோவான் 15:18-25). சீடர்களுக்கு துணையாக தேற்றரவாளனை அனுப்பித் தருவதாக உறுதி மொழிந்தார் (யோவான் 15:26, 16:7).

இயேசுவின் சிலுவை மரணத்தால் சோர்புற்றிருந்த சீடர்கள் பெந்தேகோஸ்தே நாளில் அருளப்பட்ட தூய ஆவியரின் பிரசன்னத்தால் ஆற்றல் பெற்றனர். “நீங்கள் சிலுவையில் அறைந்து கொலைசெய்த இந்த இயேசுவை கடவுள் உயிர்த்தெழச் செய்தார்” இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள் என தைரியமாய் சாட்சி பகிர்ந்தனர்.

கோவிலின் வாசலிலே உட்கார்ந்து கோவிலுக்குள் செல்பவர்களிடம் பிச்சைக் கேட்டுக்கொண்டிருந்த கால் ஊனமுற்றிருந்த மனிதரிடம் பேதுரு “பொன்னும் வெள்ளியும் என்னிடம் இல்லை, என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கிறேன்; இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்துநடந்திடும்” எனக் கூறி அவரது வலதுகையைப் பற்றிப்பிடித்து தூக்கிவிட்டார். உடனே அவரது காலடிகளும், கணுக்கால்களும் வலுவடைந்தன (அப். 3:1-10). இறைபிரசன்னம் வெளிப்பட்டது அன்றோ. தூய ஆவியர் இன்னும் தம் உடனிருப்பை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்.

## 2. உறவில் கூட்டி இணைக்கும் ஆவியானவர்:-

தூய ஆவியானவரை கடவுளிடம் இருந்தும், இறைமைந்தனிடம் இருந்தும் பிரித்துக் கூற இயலாது. இறைத் தந்தையின் உறவிலே ஒன்றுபட்டு கிறிஸ்துவில் தம்மை வெளிப்படுத்துகிறார்.

பாபேல் கோபுர நிகழ்வில் மக்கள் உலக முழுவதும் சிதறுண்டுப்போய் பரந்து விரிந்து வாழும்படிக்கு மொழியில் குழப்பம் ஏற்பட்டது (ஆதி. 11:7). ஆனால் பெந்தேகோஸ்தே நாளில் மக்கள் கூட்டுறவுடன் வாழ தூய ஆவியர் அருளப்பட்டார் (அப். 2:4). பல மொழி பேசும் மக்களாக கூடி வந்திருந்தாலும் ஒருவர் பேசுவதை மற்றவர் புரிந்துகொண்டனர்.

இதனால் புது உறவும், புது சமூகமும் உருவானது.

இன்று உலகம் பல்வேறு தீயச் சக்திகளினால் பிறப்பு, இடம், மொழி, சமயம், நிறம், இனம், கலாச்சாரம் பிரிந்து நிற்கிறது. உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது. இதற்கு வெளிச்சம் கொடுப்பவர் ஆவியரே. அவரே தீய சிந்தனைகளை அகற்றி மக்களை ஒன்றுபடுத்துபவர் திருச்சபையும் இறைமக்களும் தூய ஆவியாரின் ஆளுகைக்கு இடமளிக்கும்போது கூட்டுறவு மலர்கிறது. புதிய சமூகம் உருவாகிறது.

இயேசுவின் இறைவேண்டலும் தம் மக்களின் கூட்டுறவுக்காக ஏறெடுக்கப்பட்டது அன்றோ (யோவான் 17:22). பெந்தேகோஸ்தே நாளில் அதுவும் நிறைவேறிற்று. கூடியிருந்த அனைவர்மேலும் தூய ஆவியார் அருளப்பட்டார் (யோவேல் 2:28, அப் 2:17,18) கூட்டுறவால் ஏற்படும் மகிழ்ச்சி உயர்வானது அல்லவோ?

## 3. அருட்பணிக்கு ஆற்றல்தரும் ஆவியானவர்:-

கடவுள் “அனுப்புகிறார்” என்பதே அருட்பணிக்கு மையம். அவர் குறிப்பிட்ட நோக்கத்தோடு, குறிப்பிட்ட மக்களை, குறிப்பிட்ட காலங்களில் அனுப்புகிறார். ஆபிரகாம் போன்ற மூதாதையரை கடவுள் அனுப்பினார் (ஆதி. 12:1). ஏசாயா போன்ற இறைவாக்கினரை அனுப்பினார் (ஏசாயா 6:8-10). எல்லாருக்கும் மகுடமாக தம் திருமைந்தரை மானிட மகனாக அனுப்பினார் (யோவான் 3:16).

இயேசு கிறிஸ்து இறைவனின் அர்ப்பணிப்பில் மகுடமாக இருந்தாலும் அவருடன் அருட்பணி நின்றுவிடவில்லை. தந்தையானவர் தம்மை அனுப்பினதுபோன்று தாமும் தம் சீஷர்களை உலகத்திற்கு அனுப்புவதாகக் கூறினார் (மத்.10, யோவான் 17:18, 20:21). சீடர்களை ஆற்றல்படுத்தும்படுக்கு தம்மை அனுப்பிய தந்தையிடம்போய் துணையாளரை அனுப்பவேண்டுவதாகக் கூறினார் (யோவான் 16:5-7). அப்படியே பெந்தேகோஸ்தே நாளில் கூடியிருந்த சீடர்கள் தூய ஆவியரால் நிரப்பப்பட்டனர். அருட்பணியின் ஆற்றல் பெற்றனர்.

“நீங்கள் சிலுவையில் அறைந்து கொலைசெய்த இயேசுவை கடவுள் உயிர்த்தெழச் செய்தார் இதற்கு நாங்கள் அனைவரும் சாட்சிகள்” என முழக்கமிட்டனர் (அப். 2:32).

நற்செய்தி தடைகளை கடந்து எங்கும் சொல்லப்பட சீடர்கள் ஆற்றல்பெற்றனர். தலைமை சங்கத்தார் பேசக்கூடாது என தடைவிதித்தபோதும் சும்மாயிருக்க இயலவில்லை. “உங்களுக்குச் செவிசாய்ப்பதா? கடவுளுக்கு செவிசாய்ப்பதா? இதில் கடவுள் பார்வையில் எது முறையானது என நீங்களே தீர்மானித்துக்கொள்ளுங்கள். என்ன ஆனாலும் நாங்கள் கண்டதையும், கேட்டதையும் எடுத்துரைக்காமல் இருக்க எங்களால் முடியாது” என்றனர் (அப். 4:19:20). நற்செய்தி தடைகளை கடந்து வேகமாய் அறிவிக்கப்பட்டது. இதன் பின்னணியில் எத்தனை எத்தனை கோதுமை மணிகள் நிலத்தில் விழுந்தன. நற்செய்தி நம்மை சந்தித்தது. புதுவாழ்வு பெற்றுக்கொள்வோம்.

இன்னும் கேள்விப்படாத மக்களுக்கு நற்செய்தி சொல்வதில் நம் பங்கு என்ன என்பதைச் சிந்திப்போம். தூய ஆவியரின் ஆளுகைக்கு முழுமையாய் நம்மை ஒப்படைப்போம்.

**அன்புடன் போதகர்,**
**Rev. K. கிளாட்ஸ்டன்**

# மகளிர் தியான பகுதி

## பெண் குழந்தைகளுக்கான ஒப்படைப்பு

“இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுந்தரம் கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்”.– சங்கீதம் 127:4

பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம் என்று திருமறை கூறுகிறது. ஆனால் குடும்பத்தில் பிள்ளை பிறந்த உடன் என்ன பிள்ளை என்று எல்லோரும் கேட்கிறோம். ஆண் பிள்ளை என்றால் வரவு என்று சொல்லி மகிழ்ச்சியடைகிறோம். பெண் குழந்தை என்றால் செலவு என்று சொல்லிப் புலம்புகிறோம்.

தொழில் நுட்பக் காலத்தில் எத்தனையோ அறிவியல் வளர்ச்சியைக் கண்ட பின்பும் கல்வி அறிவு பெற்ற மக்கள் சதவிகிதம் அதிகரித்தாலும், பல வசதி வாய்ப்புகள் பெருகி இருந்தாலும், அநேக புதிய புதிய சட்டங்கள் வந்தாலும், திருமறை சார்ந்த போதனைகள் கேட்டாலும், பெண்கள் இந்தச் சமுதாயத்தில் முக்கியப் பொறுப்புகளை வகித்தாலும் இன்று பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகளையே பெற்று எடுக்க விரும்புகின்றனர். காரணம் வாழ்க்கைத் துணைவரின் கொடுமையில் இருந்து தன்னைக் காத்துக்கொள்ளவும், ஆண் பிள்ளை அற்றவர் என்ற பட்டத்தை மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளாதிருக்கவுமே.

இன்றைய நாகரிகக் காலத்தில் பெண் குழந்தை என்றால் கருக்கலைப்பு, பிறப்பில் கொலை, வளர்ப்பில் பாரபட்சம் கல்வியில் பாரபட்சம், பாலியல் கொடுமைகள் இவற்றால் நல்வாழ்வைப் பெண் குழந்தைகள் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

திருமறையில் பெண் குழந்தைகள் சிறப்பிடம் பெறுகிறார்கள் திருமறையில் 2 இராஜாக்கள் 5:1-14; மத். 15:21-28, ஆகிய திருமறைப் பகுதிகளில் இரு பெண் குழந்தைகளுடைய வாழ்க்கை வரலாறு குறிப்பிடப்படுகிறது.

* பெண் குழந்தைகளின் பெயர் குறிப்பிடப்படவில்லை.
* பெண் குழந்தைகளின் பெற்றோர் பெயரும் குறிப்பிடப்படவில்லை.
* சீரிய தேசத்தில் வாழ்ந்த இஸ்ரயேலைச் சார்ந்த சிறு பெண், என்றும் தீரு சீதோன் திசைகளில் குடியிருந்த கானானியப் பெண்ணின் மகள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.
* சிறு பெண் செய்த செயல் எல்லாரையும் அவள் பக்கம் கவர்ந்தது. கானானியப் பெண் தன் பெண் குழந்தை சுகமாக இயேசுவிடம் வேண்டி பெரிய விசுவாசத்தை வெளிப்படுத்தி இயேசவிடம் இருந்து பாராட்டு பெறுகின்றாள்.

ஏன் பெண் குழந்தைகளுக்காக நம்மை ஒப்படைக்க வேண்டும்? எப்படிப் பெண் குழந்தைகளை உரிமையுடன் உலகில் வாழவைப்பது? என்பதைச் சிந்திப்பது சிறப்பு.

## 1. தடைகளை தாண்டி ஒப்படைத்தல்

தடைகளைத் தாண்டி பிறருக்கு உதவுவது நற்செயல் ஆகும். தேவையில் இருப்போருக்கு உதவிடத் தடையாயிருப்பவற்றை உடைத்தெறிய வேண்டும். புற ஜாதிப் பெண்மணி தன் மகள் சுகம் பெற தடைகளை தாண்டி தன்னை ஒப்படைக்கிறார்.

அவளுக்கு இருந்த தடைகள் என்ன?

* புற இனத்துப் பெண்மணி
* சபிக்கப்பட்ட குலத்தைச் சார்ந்தவள்.

* யூதர்களால் புறக்கணிக்கப்பட்டவள்.
* யூதர்களின் பார்வையில் கடவுளிடமோ, மேசியாவிடமோ எதையும் உரிமை கோர முடியாதவள்.

இந்தத் தடைகளைத் தாண்டி தன் மகள் சுகம் பெற இயேசு கிறிஸ்துவிடம் மன்றாடும்போது அவரை ஆண்டவர் என்றும் தாவீதின் குமாரன் என்றும் அழைத்து தன்னை ஒப்படைக்கிறாள்.

இஸ்ரேலிய சிறு பெண்ணுக்கு ஏற்பட்ட தடைகளாவன ; சிறு பெண், அடிமைப் பெண், சிறைபிடிக்கப்பட்டவள் எப்படித் தலைவன் வீட்டில் உரிமையோடு பேசமுடியம். ஆனால் இவளோ இத்தகைய தடைகளைத் தாண்டி ஒப்படைக்கிறாள்.

மாற்கு 14:3-9 வரையுள்ள பகுதியில் ஒரு பெண்மணி அனைத்துத் தடைகளையும் தாண்டி இயேசுவண்டை வருகிறாள். அதற்குப் பல எதிர்ப்புகளும் வந்தன. ஏனெனில் பாவியான பெண் ஒரு யூத ரபியைத் தொடுவது ஏற்றுக்கொள்ளப்படாத ஒன்று (லூக். 7:39).

மேலும் அவளுடைய கொடைக்குத் தடை வருகிறது (மாற். 14 : 15) இப்பெண்மணியின் ஒப்படைத்தலை இயேசு அங்கீகரிக்கிறார். ஒதுக்கப்பட்டுள்ளனர் என்பதை நாம் எண்ணிப் பார்ப்பது நலம்.

## 2. தடுமாற்றமில்லா நம்பிக்கையுடன் ஒப்படைத்தல் (மத் 15 : 23)

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பது போல புற இனத்துப் பெண்மணி என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையுடனும், கடவுள் துணை நிற்பார் என்ற நம்பிக்கையுடனும் செயல்பட்டாள். சீடர்களுக்கு அவள் இடையூறாக இருந்தாலும், இறையவரில் அவள் வரவேற்கத் தகுந்த விசுவாச முன் மாதிரியுடையவளாக இருந்தாள். இறையருள் பெற்றுக்கொள்ளும் தகுந்த பாத்திரமாக விளங்கினாள். ஆனால் முதலில் அவளது நம்பிக்கையைச் செய்முறைப் பாடம் போல நிருபிக்க வேண்டியதாக இருந்தது. அவளது விசுவாசத்தின் உண்மைத் தன்மையை வெளிக்கொணர இயேசு துணிந்து விட்டார் (15:16) புற இனத்துப் பெண்மணியின் செயல்பாடு பாரட்டும்படியாக அமைந்தது. எனவே இயேசு அவளது பெரிய நம்பிக்கையைப் பார்த்து மனதாரப் பாராட்டினார். தடுமாற்றமில்லா நம்பிக்கையுடன் போராடி இறைமேன்மையைப் பெற்றாள்.

சிறு பெண் கடவுள் பயம் நிறைந்தவள். கடவுளின் ஆற்றலின் மீது அளவில்லாத நம்பிக்கை மிகுந்தவள். இறைப்பணியாளர்கள் மீது மிகுந்த மரியாதையும், இறைப்பணியாளர்கள் வழியாய் கடவுள் செயலாற்ற முடியும் என்பதில் மிகுந்த நம்பிக்கையும் உடையவளாயிருந்தாள். ஆகவே தான் நாகமான் தொழுநோய் நீங்க சமாரியாவிலிருக்கிற இறைவாக்கினரிடத்தில் செல்வரானால் நலமாயிருக்கும் என அறிவுரை வழங்கினாள்.

## 3. தன்னிகரற்ற வெற்றி வாழ்வுக்கு ஒப்படைத்தல் (மத் 15 : 28)

புற இனத்துப் பெண்மணி தன் மகள் நோயிலிருந்து ஆரோக்கியமடைய தன்னை ஒப்படைத்தாள். இயேசுவிடன் தன் மகளுக்காக விடாமுயற்சியோடு போராடி வெற்றி கண்ட பெண்மணியை போல உரிமை இழந்து, ஒதுக்கபட்டு இருக்கும் பெண் குழந்தைகளின் வாழ்வில் முழு சுதந்திரம் கிடைக்க நம்மை ஒப்படைப்பது சிறப்பு. கூலித் தொழிலாளியின் மகளாகப் பிறந்தவள் அஸ்வினி. எப்படியாவது வாழ்வில் சாதித்து, பெற்றோரைக் காப்பாற்ற நினைத்தாள். உலகக் கல்வியைத் சாதித்து, பெற்றோரைக் காப்பாற்ற நினைத்தாள். உலகக் கல்வியைத் தொடங்கி தடுமாற்றமில்லா முயற்சியோடும், முனைப்போடும் தடகளம் விளையாட்டுப் பயிற்சியில் ஈடுபட்டாள். அவள் விடாமுயற்சியோடு பயிற்சி பெற்று நடந்து

முடிந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கங்கள் பெற்று வெற்றியோடு திரும்பினாள். இது அவளுக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி.

சமாரியா நாட்டில் ஆதரவற்றிருந்த சிறுப் பெண் தன் குழந்தை பருவத்தில் அவள் பெற்றுக் கொண்ட இறை அறிவு, பக்தி வாழ்வு இவைகளினால் தொழுநோயினால் பாதிக்கப்பட்ட நாகமான் நோயிலிருந்து விடுதலை பெறவும், இஸ்ரயேலிலிருக்கிற கடவுளைத்தவிர பூமியெங்கும் வேறே கடவுள் இல்லை என்பதை அறிந்தேன் என்று நாகமான் வெற்றி குரல் எழுப்பவும் சிறு பெண் துணைபுரிந்தாள்.

இயேசு தன் திருப்பணிக் காலத்தில் துன்புறும் மக்கள் மீது கரிசனையுடன் செயல்பட்டதைத் திருமறையில் படிக்கிறோம். நாம் வாழும் உலகில் உரிமை இழந்து வாழும் பெண் குழந்தைகள் எல்லா உரிமைகளையும் பெற்றிட தடைகளைத் தாண்டி, தடுமாற்றமில்லா நம்பிக்கைவுடன் தன்னிகரற்ற வெற்றிவாழ்வு பெற நம்மையே ஒப்படைத்து பெண் குழந்தைகள் வாழ்வில் நம்பிக்கையின் ஒளியினை வீசச் செய்வோம். இறையரசுப் பணியினில் கிறிஸ்துவோடு பயணிப்போம்.

**அன்புடன் போதகர்,**
**Rev. K. கிளாட்ஸ்டன்.**

## சிறுவர் பகுதி

## வசனமே வெளிச்சம்

ஒருநாள் ஒரு தகப்பனும் மகனும் வெளியூருக்கு தங்கள் மோட்டார் சைக்கிளில் சென்றுவிட்டு ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தனர். குறுக்குப் பாதையில் சென்றால் சீக்கிரமாக வீட்டுக்கு வந்துவிடலாம் என அந்த பாதையில் பயணித்தனர். திடீரென்று வழியிலேயே மோட்டார் சைக்கிள் பழுதாகிப்போனது. உடனே அங்குமிங்கும் தேடிப்பார்த்து ஒரு மெக்கானிக்கை கண்டுபிடித்து வண்டியை சரிசெய்ய பிரயாசப்பட்டனர். வண்டியைப் பரிசோதித்த மெக்கானிக் அதை பழுதுபார்த்து சரிசெய்ய ஒருநாள் ஆகும் என்று சொன்னார். அதற்குள் இரவும் வந்துவிட்டது. தெருவிளக்குகள் எதுவும் அந்த பாதையில் இல்லை. தந்தையும் மகனும் என்ன செய்வதென்று தெரியாமல் யோசித்தபோது மெக்கானிக் ஒரு சிறிய டார்ச்லைட் ஒன்றைக் கொடுத்து வீட்டுக்கு போய்விட்டு நாளைக்கு வந்து பைக்கை எடுத்துச்செல்லுங்கள் என்றார். தந்தையும் மகனும் டார்ச்லைட்டுடன் நடக்க ஆரம்பித்தனர். வீடுபோய்சேர குறைந்தது ஒருமணி நேரம் நடக்கவேண்டும்.

இருட்டை பார்த்து பயந்த மகன் தன் தந்தையிடம் இருளைப்பார்த்தா பயமாயில்லையா? என்று கேட்டான். இல்லை மகனே, நான் இருளிலே இருந்தால் கர்த்தர் எனக்கு வெளிச்சமாயிருப்பார் என்று சொல்லு உனக்கும் பயமெல்லாம் போய்விடும் என்று தந்தை சொன்னார்.

மறுபடியும் மகன் அப்பா வழியெல்லாம் எவ்வளவு கல்லு கல்லாக இருக்கிறதே, எங்கேயாவது தடுக்கி விழுந்துவிடக்கூடாதே என்றான். அதற்கு உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு தூதர்கள் உன்னை தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்ற வசனத்தைச் சொல்லிக்கொண்டே போனால் விழவும் மாட்டோம், விழுந்திருவோமோ என்கிற பயமும் வராது என்றார் தந்தை.

சரி அப்பா, இந்த காட்டுப்பாதையில் மிருகமோ, விஷப்பூச்சியோ வந்து நம்மை கடிக்க வந்தா என்ன பண்ணுவோம் என்று கேட்டான் மகன். அதற்கு, சிங்கத்தின்மேலும், விரியன்பாம்பின்மேலும் நீ நடந்து பாலச்சிங்கத்தையும், வலுச்சர்ப்பத்தையும் மிதித்துப்

போடுவாய் என்று வசனம் இருக்கிறதே, அதை நம்பினால் போதும் ஒரு சேதமும் வராது என்றார் தந்தை.

எந்த கேள்வி கேட்டாலும் அப்பா வசனத்திலிருந்துதான் பதில் சொல்வார் என மகனுக்குத் தெரியும். அப்பாவுடைய விசுவாசம் மகனுக்கு ரொம்ப ஆச்சரியத்தைத் தந்தது. அதற்குள் அவர்கள் ஊரும் அருகில் வந்தது.

அப்பா இன்னும் கொஞ்ச நேரத்தில் நம்ம வீட்டுக்குப் போய் சேர்ந்திடுவோம். நாம் வந்த இந்த பயணத்தில் நமக்கு ஆண்டவருடைய வசனம் எவ்வளவு ஆறுதலாக இருந்தது. வாழ்வை முழுவதும் இப்படி சொல்வதற்கு வசனங்கள் இருக்குதாப்பா என்று கேட்டான்.

அப்பொழுது தந்தை தன் கையிலிருந்த டார்ச் லைட்டை மகனிடம் கொடுத்து, இந்த டார்ச் வெளிச்சத்தை நம் வீடுவரை தெரியும்படி காட்டு என்று சொன்னார். அப்பா இது டார்ச் லைட். கொஞ்ச தூரம்தான் அதிகமா 50 அடிதூரம் வெளிச்சம்காட்டும் இந்த டார்ச்லைட்டை வைத்துவிட்டு 5 கிலோமீட்டர் தூரம் கடந்து வந்திருக்கிறோம். கொஞ்சம் கொஞ்சமாக அடுத்தடுத்து வழிகாட்டி வழிகாட்டி நம்மை வீட்டுக்கு கொண்டுசேர்த்துவிடும் இந்த டார்ச்லைட். இதைவிட மேலானது தான் ஆண்டவருடைய வசனம். ஒவ்வொரு சூழ்நிலைக்கும் ஆண்டவரின் வசனம் தைரியமும், ஆலோசனையும், தேற்றரவும் தந்து நம்மை வழிநடத்தும். ஆண்டவருடைய வசனத்தை நம்பி அதை அறிக்கை செய்துகொண்டே வாழ்ந்தால் வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியாக கரை சேர்ந்துவிடலாம் என்று தந்தை கூறினார்.

அதனைக்கேட்டதும் உண்மையாகவே உங்களைப்போலவே நானும் நல்ல விசுவாசமுள்ளவனாகி ஆண்டவருடைய வசனத்தைச் சொல்லி சொல்லி அறிக்கை செய்துவாழ விரும்புகிறேன் அப்பா என்று சொன்னான் மகன். பைக் பழுதுபட்டதால் தன் மகனுக்கு வசனத்தைப்பற்றி சொல்லிக்கொடுக்க முடிந்தது என்ற ஆனந்தத்தில் மகனை தந்தை முத்தமிட்டார்.

அன்பான பிள்ளைகளே! வசனமே நம் வாழ்க்கையின் ஒவ்வொரு சூழ்நிலையிலும் நமக்கு வழிகாட்டியாக வரும் எனவே வசனத்தை விடாமல் பற்றிக்கொள்ளுங்கள்.

**சிந்தனை வசனம்:** உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும். என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது.

**அன்புடன் போதகர்,**

**Rev. K. கிளாட்ஸ்டன்.**

## மனிதர்களை தேடிய மாமனிதர்கள்

## வில்லியம் கேமரான் டவுன்செண்ட்

## எங்கே என் வேதாகமம்?

**மண்ணில்** : 09.07.1896
**விண்ணில்** : 23.04.1982
**ஊர்** : மெக்சிகோ
**நாடு** : அமெரிக்கா
**தரிசன பூமி** : குவாட்டமாலா

“உங்கள் கடவுள் பெரியவரென்றால் எங்கள் மொழியில் ஏன் பேசவில்லை?”
வில்லியம் கேமரான் டவுன்செண்ட் அவர்களிடம் காச்சிகூல் இந்தியன் இவ்விதமான கேள்வியைக் கேட்டான்.

அம்மக்கள் மத்தியில் ஊழியத்திற்குச் சென்ற இவருக்கு இக்கேள்வி மிகுந்த சவாலாக அமைந்தது. அம்மக்களுக்கு அவர்கள் மொழியிலேயே வேதாகமத்தைக் கொடுத்துவிடவேண்டும் என்று ஆவல்கொண்டார்.

இவருடைய மனைவி எல்வீரா, அப்பழங்குடியினர் பேசும் மொழியை பத்து வருடங்களாக ஆராய்ச்சிசெய்து, அம்மொழிக்கு எழுத்து வடிவம் கொடுத்தார். அம்மக்களுக்கும் எழுத்துப்பயிற்சி கொடுக்கப்பட்டது. நீண்ட பிரயாசத்திற்குப்பின் 1931-ம் வருடம், காச்சிக்கூல் மொழியில் புதியஏற்பாடு வெளிவந்தது.

வில்லியம் கேமரான் ஜான் விக்ளிப் அவர்களின் பெயரால் ஒரு வேதாகம மொழிபெயர்ப்புப் பள்ளியை ஆரம்பித்தார். முதல் வருடத்தில் 2 மாணவர்களே அப்பயிற்சியில் சேர்ந்தனர். 2-ம் வருடம் அது 5-ஆக மாறியது. 1942-ஆம் வருடம், விக்ளிப் வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் என்ற அமைப்பைத் தோற்றுவித்தார்.

புரோட்டஸ்டாண்ட் மிஷன் இயக்கத்தில் இதுவே மாபெரும் வேதாகம மொழிபெயர்ப்பு அமைப்பாகும். 1951-ம் வருடம், இவ்வமைப்பு தனது முதல் வேதாகமத்தை வெளியிட்டது. தற்பொழுது 400 மொழிபெயர்ப்புகள் அடங்கிய வேதாகமங்களை இச்சங்கம் வெளியிட்டுள்ளது.

இன்றும் நாம் வாழும் இந்த உலகில் 2,000க்கும் அதிகமான மக்கள் இனங்கள் உள்ளன. அவர்களுக்கு அவர்கள் மொழியில் வேதாகமங்கள் வழங்கப்படவில்லை. ஆண்டவர் எங்கள் மொழியில் பேசமாட்டாரா என்று ஏங்கும் அந்த மக்களுக்கு உங்கள் பதில் என்னவாக அமையும்? வில்லியம் கேமரானைப் போன்று சிந்திக்க வேண்டாமா?

அன்பரே! வில்லியம் கேமரானைப்போன்று நீங்களும் இப்பணிக்கு முழுமனதுடன் உங்களை அர்ப்பணிப்பீரா?

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு:-** அன்பானவர்களே! ஒருவருக்கொருவர் அன்பினாலே சேவை செய்யுங்கள். வேத புத்தகத்தை ஒவ்வொரு மொழியிலும் மொழிபெயர்த்து, அப்பணியை நிறைவு செய்யுங்கள் - கேமரோன்.

**குயவனின் கரங்களில்:-** ஆண்டவரே! பிறமொழியில் வேதாகமத்தைக் கொண்டுவர என்னையும் பாத்திரமாக பயன்படுத்தும்.

(நன்றி: 365 மிஷனெரிகளின் வரலாறு)

## வரவேற்கிறோம்!

கடந்த மாதங்களில் நமது சபை ஐக்கியத்தில் புதிய அங்கத்தினர்களாக இணைந்த உங்களை கிறிஸ்துவின் நாமத்தில் அன்புடன் வரவேற்கிறோம்.

| Name | Native Place | Area |
|---|---|---|
| Mr. Praveen Jebasingh | C.S.I Resurrection Church, Mogapair | Ghubra |
| Mr. D. Ahigen Paul | C.S.I Christ Church, Nagarcoil | Al Khuwair |
| Mr. Abishek Naveen | C.S.I. St. Matthias Church, Vepery | Darsait |

## பாடலின் பின்னணியம்
## குயவனே, குயவனே

ஏசாயா 64 : 8 — பாடல் : B. ராஜன்

சங்கீதம் 23 : 6 — ராகம் : B. ராஜன்

குயவனே, குயவனே, படைப்பின் காரணனே!
களிமண்ணான என்னையுமே கண்ணோக்கிப் பார்த்திடுமே
வெறுமையான பாத்திரம் நான்; வெறுத்துத் தள்ளாமலே,
நிரம்பி வழியும் பாத்திரமாய் விளங்கச் செய்யுமே;
வேதத்தில் காணும் பாத்திரமெல்லாம் இயேசுவைப் போற்றிடுதே;
என்னையும் அவ்வித பாத்திரமாய் வனைந்து கொள்ளுமே.
இறைவனே, இறைவனே, இணையில்லாதவனே!
குறை நிறைந்த என்னையுமே கண்ணோக்கிப் பார்த்திடுமே;
விலைபோகாத பாத்திரம் நான் விரும்புவாரில்லையே;
விலையில்லா உம் கிருபையால் உகந்ததாக்கிடுமே;
தடைகள் யாவும் நீக்கி என்னை தம்மைப் போல் மாற்றிடுமே;
உடைத்து என்னை உந்தனுக்கே உடைமையாக்கிடுமே.
மேய்ப்பனே, மேய்ப்பனே, மந்தையைக் காப்பவனே!
மார்க்கம் அகன்ற என்னையுமே கண்ணோக்கிப் பாருமே;
மண்ணாசையில் நான் மயங்கியே மெய்வழி விட்டகன்றேன்;
கண்போன போக்கைப் பின்பற்றியே கண்டேனில்லை இன்பமே;
காணாமற் போன பாத்திரம் என்னைத் தேடிவந்த தெய்வமே,
வாழ்நாளெல்லாம் உம் பாதம் செல்லும் பாதையில் நடத்திடுமே.

1980–ம் ஆண்டின் லெந்து நாட்களில், சென்னை இந்திய வேதாகம கல்லூரியின் ஆசிரியர்கள் அறையில், சகோதரர் பிரேம்குமார் தனது சக விரிவுரையாளரான ராஜனிடம், “ஒரு நல்ல செய்தி தெரியுமா, நமது கல்லூரியின் பாடகர் குழுவுக்கு, இன்னிசையில் நற்செய்திப்பணி செய்ய, பம்பாயிலிருந்து அழைப்பு வந்திருக்கிறது. நீங்களும் எங்களோடு வரவேண்டும்” என உற்சாகமாய் செய்தியை பகிர்ந்து கொண்டார். சகோதரர் பிரேம் சி.எஸ்.ஐ திருநெல்வேலி பேராயரான மாமறைத்திரு. ஜேசன் தர்மராஜின் சகோதரராவார்.

அந்த செய்தியைக் கேட்ட ராஜன் பிரேமிடம், “ரொம்ப சந்தோஷம், ஆனால் லெந்து நாட்களின் முடிவாக இருக்கும் இந்நாட்களில், பரிசுத்த வார நிகழ்ச்சிகளுக்கு ஆயத்தம் செய்ய வேண்டுமே. ஆகவே நீங்கள் சென்று வாருங்கள். நான் இங்கிருந்து உங்கள் ஊழியத்திற்காக ஜெபித்துக் கொள்கிறேன்.”

அதற்கு பிரேம் ராஜனிடம், “25 பேர் கொண்ட மாணவர் குழுவை நான் மட்டும் தனியாக

தனியாக வழிநடத்துவது கடினமான காரியம். மேலும், நீங்கள் ஒரு நல்ல பாடகர். உங்கள் தனிப்பாடல்களைக் கொண்டு, நமது ஊழியத்தை இன்னும் சிறப்பாக செய்யலாமே. பல இடங்களில் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்திருக்கிறார்கள். அவற்றில் நற்செய்தியை அளிப்பதற்கு, நீங்களும் என்னுடன் சேர்ந்து பங்கேற்றால், எனக்கு உதவியாக இருக்கும்."

தன் நண்பரின் வற்புறுத்தலின் பேரில், அக்குழுவுடன் இணைந்து ராஜன் பம்பாய்க்கு பயணமானார். தேவன் அவர்களுடைய பம்பாய் ஊழியங்களை அபரிதமாய் ஆசீர்வதித்தார்.

அந்நிகழ்ச்சிகளில் அளிக்கப்பட்ட செய்திகளின் மையப்பொருள், "குயவனின் களிமண்" ஆகும். ராஜன் தானே ஒரு செய்தியாளராக அங்கு விளங்கினாலும், தன் சக ஊழியரின் செய்தியையும், தன் வழக்கத்தின்படிக் கூர்ந்து கவனித்து, தன் உள்ளத்தில் பதியச் செய்தார். சென்னைக்குத் திரும்பியவுடன், இப்பாடலை இந்த மையப்பொருளின் அடிப்படையில் இயற்றினார்.

சகோதரர் ராஜனுடன் பம்பாய் ஊழியத்தில் கலந்து கொண்டு கிற்றார் இசைத்த மாணவர் ஒருவர், தனது வேனிற்கால விடுமுறைக்கு முன், ராஜனைச் சந்தித்துப் பேச அவரது வீட்டிற்கு வந்தார். அப்போது ராஜன், தான் புதிதாக இயற்றிய இப்பாடலை பாடிக் காட்டினார். அம்மாணவர் இப்பாடலை மிகவும் ரசித்துக் கேட்டு பாராட்டினார். பின்னர், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு தங்களின் கூட்டங்களிலும், தாம்பரம் பிலடெல்பியா சபையைச் சேர்ந்த சகோதரர் பாஸ்கரதாஸ் தமது ஊழியங்களிலும் இப்பாடலைப் பாடி, பிரபலமாக்கினர்.

**பாடகர் குழு – CSI Tamil Church – Oman** **(நன்றி – அமைதி நேர ஊழிய வெளியீடு)**

## மகளிர் பகுதி

## திருமறை அறிவுப்போட்டி - 75

## 2019 - ஜூன் மாத கேள்விகள்

## (சங்கீதம் 3 முதல் 22 வரை)

1. இரட்சிப்பு யாருடையது?
2. சுகமாய் தங்கப்பண்ணுவது யார்?
3. யார் சந்தோஷித்து கெம்பீரிப்பார்கள்?
4. அழுகையின் சத்தத்தைக் கேட்டது யார்?
5. நீதியுள்ள நியாயாதிபதி யார்?
6. தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கப்பட்டது யார்?
7. யார் நரகத்தில் தள்ளப்படுவர்?
8. திக்கற்றப் பிள்ளைகளுக்குச் சகாயர் யார்?
9. கர்த்தருடைய முகம் யாரை நோக்கியிருக்கிறது?
10. சுத்த சொற்களாயிருப்பது எது?
11. ஒருவர் தள்ளாடும்போது களிகூருபவன் யார்?
12. கர்த்தர் யாருக்கு அடைக்கலமாயிருக்கிறார்?
13. கர்த்தருக்குப் பயந்தவர்களை கனம்பண்ணுவது யார்?
14. கர்த்தரின் சமூகத்தில் எது உண்டு?
15. தங்கள் வாயினால் வீம்பு பேசுகிறவர்கள் யார்?
16. தம்மை நம்புகிறவர்களுக்கு கேடகமாயிருப்பது யார்?
17. ஆத்துமாவை உயிர்ப்பிப்பது எது?

18. கர்த்தர் யாரை இரட்சிக்கிறார்?
19. உன்னதமானவருடைய தயவினால் அசைக்கப்படாதிருப்பது யார்?
20. புசித்து திருப்தியடைவது யார்?

## மே 2019 மாத திருமறை அறிவுப்போட்டிக்கான விடைகள்

1. வீண்வார்த்தைக்கு – யோபு 35:13
2. அநேகரால் பலவந்தமாய் ஒடுக்கப்பட்டவர்கள் - யோபு 35:9
3. தேவன் - யோபு 36:5,6
4. தேவனுடைய வருஷங்களின் இலக்கம் - யோபு 36:26
5. சர்வ வல்லவர் - யோபு 37:23
6. கெட்டியான ஆகாயமண்டலங்கள் - யோபு 37:18
7. கர்த்தர் யோபுவிடம் - யோபு 38:1,3, 40:7
8. மேட்டிமையான புயம் - யோபு 38:15
9. கழுகு – யோபு 39:27
10. தீக்குருவி – யோபு 39:13
11. பிகெமோத் - யோபு 40:15
12. பிகெமோத் - யோபு 40:15,23
13. லிவியாதான் - யோபு 41:1-18
14. லிவியாதான் - யோபு 41:1-34
15. தேவன் - யோபு 42:2
16. சிநேகிதருக்காக யோபு ஜெபித்தபோது – யோபு 42:10
17. துன்மார்க்கரின் பலி – சங்கீதம் 1:6
18. இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருக்கும் மனுஷன் செய்வது – சங்கீதம் 1:2
19. பயத்துடனே – சங்கீதம் 2:11
20. சீயோன் - சங்கீதம் 2:6

## ஜூன் மாதம் வேதபாடங்கள் வாசிப்பவர்கள் பெயர் விபரம்

| | | |
|---|---|---|
| 07-06-2019 | ஏசாயா 61:1-11 | Mrs. Percy Jean |
| | லூக்கா 4:16-21 | Mr. Austin Daniel |
| 14-06-2019 | ஆதியாகமம் 18:1-15 | Mrs. Priyadharsini Kanagavel |
| | மாற்கு 1:1-11 | Mr. Bejo Nelson |
| 21-06-2019 | 1 இராஜாக்கள் 8:22-30 | Mrs. Regin Justa Vinolin |
| | மாற்கு 3:1-6 | Mr. Bensam |
| 28-06-2019 | 1 இராஜாக்கள் 19:11-21 | Mrs. Sarah Raja Singh |
| | யோவான் 1:35-42 | Mr. Berin Raja |
| 05-07-2019 | ஆதியாகமம் 13:8-18 | Mrs. Sathya Priya Ramesh |
| | மாற்கு 14:3-11 | Mr. Berkins |

## ஆண்கள் பகுதி

## திருமறை அறிவுப்போட்டி - 61

## ஜுன் 2019 மாத கேள்விகள்

## (1நாளாகமம் 3 முதல் 12 வரை)

1. செருபாபேலின் குமாரத்தியின் பெயர் என்ன?
2. தாவீது எருசலேமில் எத்தனை வருடம் அரசாண்டான்?
3. இஷியின் குமாரர் எத்தனை பேர்?
4. அஸ்பெயா வீட்டு வம்சங்களின் பெயர் என்ன?
5. பாசான் எங்குள்ளது?
6. காத் புத்திரரின் தலைவன் யார்?
7. கேதேஸ் எங்குள்ளது?
8. இஸ்ரவேலுக்காக பாவநிவிர்த்தி உண்டாக்குகிறதற்கு வைக்கப்பட்டிருந்தவர்கள் யார்?
9. மாக்காளின் குமாரர் பெயர் என்ன?
10. ஆசேரின் புத்திரரில் யுத்தத்திற்கு போகதக்க சேவகரின் எண்ணிக்கை எத்தனை?
11. கிபியோனின் மூப்பன் எங்கு குடியிருந்தான்?
12. பராக்கிரமசாலிகளான வில்வீரராக இருந்தவர்கள் யார்?
13. பலகாரம் சுடும்வேளையில் விசாரிப்பு யாரிடம் ஒப்புவிக்கப்பட்டிருந்தது?
14. பிரதான காவலாளர்கள் யார்?
15. பட்டயத்தின்மேல் விழுந்து செத்துப்போனது யார்?
16. சவுலைக் கொன்றது யார்?
17. எது தாவீதின் நகரமாயிற்று?
18. மூன்று பராக்கிரமசாலிகளில் பேர்பெற்றவன் யார்?
19. தாவீதை இஸ்ரவேலின்மேல் இராஜாவாக்க உத்தம இருதயத்தோடே எப்ரோனுக்கு வந்தவர்கள் யார்?
20. செபதியாவின் மற்றொரு பெயர் என்ன?

## மே 2019 மாத திருமறை அறிவுப்போட்டிக்கான விடைகள்

1. சனகெரீப் - 2இரா. 18:13
2. யூத பாஷை - 2இரா. 18:26,28
3. விண்ணப்பம் பண்ணினான்- 2இரா. 19:14,19
4. இராத்திரியில் - 2இரா. 19:35
5. பாபிலோனிலிருந்து வந்தவர்கள் - 2இரா. 20:14,15
6. ஏசாயா தீர்க்கன் கர்த்தரை நோக்கி கூப்பிட்டபோது – 2இரா. 20:11
7. மெகல்லேமேத் - 2இரா. 21:18,19
8. தன் நரகலான விக்கிரகங்களினால் - 2இரா. 21:11
9. அசாயா – 2இரா. 22:12
10. சாப்பானிடத்தில் - 2இரா. 22:8
11. தேசத்தின் ஜனங்கள் - 2இரா. 23:30
12. யோசியா – 2இரா. 23:34
13. சிதேக்கியா – 2இரா. 24:20
14. ஏழாயிரம் பேர் - 2இரா. 24:16
15. கெதலியா – 2இரா. 25:22

16. நெபுசராதான் - 2இரா. 25:8
17. ஆதாத் - 1நாளா. 1:46
18. பேலேகு – 1நாளா. 1:19
19. அபியாயேல் - 1நாளா. 2:29
20. யர்கா – 1நாளா. 2:34

**2019 மே மாத மகளிர் திருமறை அறிவுப்போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்**

| | |
|---|---|
| Mrs. Aspin Bejo | Mrs. Percy Jean |
| Mrs. Boopathi Basker | Mrs. Priyadharsini Kanagavel |
| Mrs. Eben Silviya Ennesar | Mrs. Pushpa Rani Moorthy |
| Mrs. Golden Irene Sheeja | Mrs. Regin Justa Vinolin |
| Mrs. Gracelin Melba | Mrs. Sarah Raja Singh |
| Mrs. Jancy Victor Johnslin | Mrs. Sathya Priya Ramesh |
| Mrs. Jaya Victor | Mrs. Shabila Gnanadhas |
| Mrs. Juslin Jaslin | Mrs. Shiney Johan |
| Mrs. Leela Gladson | Mrs. Vanitha Rani Prince |
| Mrs. Manju Martin | Mrs. Virgin Jegatha Jino |
| Mrs. Menaka David | |

**2019 மே மாத ஆண்கள் திருமறை அறிவுப்போட்டிக்கு சரியான விடை எழுதியவர்கள்**

| | |
|---|---|
| Mr. Anu | Mr. Kanagavel |
| Mr. Alex Baskar | Mr. Mohan Babu |
| Mr. Bejo Nelson | Mr. Ramesh |
| Mr. David Prabhakaran | Mr. Robin Devadhas |
| Mr. Johan Pratheep | Mr. J.P. Prince |
| Mr. Jaslin | Mr. Selvamani |
| Mr. Jean C.R. Shibin | Mr. Vinolin |
| Mr. Jino John | |

## மே மாத ஆண்கள் சங்க அறிக்கை

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்.

ஆண்டவரின் சுத்தக் கிருபையால் நமது சபையின் ஆண்கள் சங்கமானது 16-05-2019 அன்று இரவு மார்த்தோமா ஹாலில் 9 மணியளவில் சங்க செயலர் திரு. சைலஸ் அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பமானது. சங்க உறுப்பினர்கள் ஆவிக்குரிய பாடல்களை பாடி நன்றி ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

அதன்பின் ரோமர் 12-ம் அதிகாரம் வாசிக்கப்பட்டது. திரு. கனகவேல் அவர்கள் ஆண்டவருடைய செய்தியை வழங்கினார்கள். அதில் “ஒருவரில் ஒருவர் அன்பாய் இருங்கள்” என்ற தலைப்பில் சகோததர சிநேகம் பற்றி எடுத்துரைத்தார்கள்.

1. கனம்பண்ணுவதில் முந்திக்கொள்ளுங்கள் (ரோமர் 12:10).
2. சகோதரனோடே வழக்காடாதே (1கொரிந்தியர் 6:5-8).
3. சகோதரனோடே ஒப்புரவாகு (மத்தேயு 5:22-24).
4. உன்னை சரிசெய்தபின் சகோதரனுக்கு உதவு (மத்தேயு 7:3-5).

என்ற தலைப்புகளில் அநேக வசனங்களை சுட்டிக்காட்டி அருமையான செய்தியை பகிர்ந்துகொண்டார்கள். செய்தி அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது. பின்னும் பாலிய புருஷரையும், ஸ்திரீகளையும் நாம் சகோதரிகளாக பார்க்கவேண்டும் என்றும் நல்லொழுக்கத்தை மற்றவர்களுக்கும் நாம் போதிக்கவேண்டும் என்றும் அறிவுரையையும் வழங்கினார்கள்.

ஜெபவேளையில் தேசத்திற்காகவும், சபைக்காகவும், குடும்பங்களுக்காகவும், கடன்சுமைகளினால் தவிக்கிறவர்களுக்காகவும், வியாதியஸ்தருக்காகவும், இன்னும் அநேக காரியங்களுக்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டு 11 மணியளவில் கூட்டம் இனிதே நிறைவடைந்தது. அனைவருக்கும் ஆசீர்வாதமாக அமைந்தது. கூடுகையை தாங்கியவர்கள் திரு. ராபின் தேவதாஸ், திரு. செல்வமணி மற்றும் உணவு வழங்கியவர்கள் திரு. தன்ராஜ், திரு. ரமேஷ் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பிற்குரிய விசுவாசிகளே! திருச்சபை ஆண்கள் அனைவரும் ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகையில் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுச்செல்ல அன்புடன் அழைக்கிறோம்.

**இவண்,**
**ஆண்கள் ஐக்கிய சங்க செயலர்**
**திரு. M. சைலஸ்**

## துக்கம் பகிர்வோம்

கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்

நமது சபை அங்கத்தினா் திருமதி. பிரியா ரமேஷ் அவா்களின் பாட்டி திருமதி. எஸ்தர் alias ப்ரமராம்பா அவா்கள் மே மாதம் 21-ஆம் தேதி அன்று கிறிஸ்துவுக்குள் இறை அழைப்பைப் பெற்றாா்கள். அவா்களை இழந்து தவிக்கும் குடும்பத்திற்கு கடவுள் ஆறுதலையும், சமாதானத்தையும் அருள்வாராக.

# மே மாத பெண்கள் ஐக்கிய சங்க அறிக்கை

இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் பாலைவன மன்னா வாசகர்கள் அனைவருக்கும் பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

மே மாத பெண்கள் சங்க கூடுகை மே மாதம் 16-ம் தேதி, CSI Malayalam Hall-ல் வைத்து இரவு 9 மணியளவில் திருமதி. ஷைனி ஜோகன் அவர்கள் ஜெபத்துடன் ஆரம்பமானது. ஆவிக்குரிய பாடல்கள் பாடி தேவனைத் துதித்த பின்னர், திருமதி. பிரியதர்ஷினி கனகவேல் அவர்கள் ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுத்தார்கள்.

அதன்பின் திருமறைப்பாடமாக யாக்கோபு 1:17-27 வசனங்கள் வாசிக்கப்பட்டு, திருமதி. பூபதி பாஸ்கர் அவர்கள் யாக்கோபு 1:19-ம் வசனத்தை மையமாக கொண்டு, நல்லதொரு செய்தியை கீழ்கண்ட குறிப்புகளில், வேதவசனங்களோடும், வேத எடுத்துக்காட்டுகளோடும் விவரித்துக் கூறினார்கள்.

1. கேட்கிறதற்கு தீவிரம்
2. பேசுகிறதற்கு பொறுமை
3. கோபிக்கிறதற்கு தாமதம்

தேவசெய்தி அனைவருக்கும் ஆசீர்வாதமாக இருந்தது. அவர்களுக்கு பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்னர் திருமதி. அஸ்பின் பெஜோ அவர்கள் ஜெபக்குறிப்புகளை பகிர்ந்துகொள்ள அந்த குறிப்புகளுக்காக ஊக்கமான ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. அதன்பின்பு சாட்சிவேளையில் பலர் கர்த்தர் தங்கள் வாழ்வில் செய்த நன்மைகளை சாட்சியாக அறிவித்து ஜெபக்குறிப்புகளையும் பகிர்ந்துகொண்டார்கள்.

பின்னர் சபைநாளுக்கான பெண்கள் சங்கத்தின் சிறப்பு பாடல், பாடகர் குழு தலைவர் திரு. பென்சாம் அவர்களின் இசையோடு பயிற்சி செய்யப்பட்டது. அவர்களுக்கு பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் சிறப்பு பாடலை இயற்றி, ராகம் அமைத்த திருமதி. ராணி பென்சாம் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்னர் நிறைவு ஜெபம் திருமதி. பிரியா ரமேஷ் அவர்களால் ஏறெடுக்கப்பட்டு, பெண்கள் சங்கமானது 11:15 மணிக்கு இனிதே நிறைவுப்பெற்றது. இறுதியில் Sponsor செய்த திருமதி. ஷீபா சுஜித் மற்றும் திருமதி. ஷைனி ஜோகன் அவர்களின் குடும்பத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த நான்கு ஆண்டுகளாக பெண்கள் ஐக்கிய சங்கத்தின் தலைவராக இருந்து, அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கி, வழிநடத்திய நமது சபையின் போதகர் Rev. Gladston அவர்களுக்கு பெண்கள் ஐக்கிய சங்கத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தாயகம் திரும்பும் அவர்களது பணி மேலும் சிறக்க அன்புடன் வாழ்த்துகின்றோம்.

இனிவரும் நாட்களில் சபையின் பெண்களாகிய நாம் அனைவரும் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு தேவஆசீர்வாதத்தைப் பெற்றுச் செல்லுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி. சாரா ராஜாசிங்**
**பெண்கள் ஐக்கிய சங்க செயலர்**

# ஜெபிக்க சில குறிப்புகள்

## திருச்சபைக்கான மன்றாட்டுக் குறிப்புகள்:-

- புதிய போதகருக்காகவும் அவருடைய விசா காரியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது சபைக்கான போதகர் விசா விரைவில் கிடைப்பதற்காகவும் ஜெபிப்போம்.
- நம் போதகருக்காகவும், குடும்பத்திற்காகவும், ஆரோக்கியத்திற்காகவும், திருப்பணிகளுக்காகவும் ஜெபிப்போம்.
- நமது திருச்சபையின் முன்னாள் குருவானவர்களுக்காகவும், அவர்கள் குடும்பங்களுக்காகவும், ஆரோக்கியத்திற்காகவும் ஜெபிப்போம்.
- சபையின் நிர்வாககுழு தெய்வபயத்தோடு திருச்சபையின் கடமைகளை நிறைவேற்றிட ஜெபிப்போம்.
- திருச்சபையின் கிளைச்சங்கங்கள் சிறப்பாக செயல்பட, நல்ல வளர்ச்சிகாண ஜெபிப்போம்.
- எல்லா ஆராதனைகளும் சிறப்பாய் நடைபெறவும், பங்கேற்போர் தேவாசீர்வாதம் பெறவும் ஜெபிப்போம்.
- திருச்சபைப்பணிகளை தன்னார்வமாய், உற்சாகமாய் தாங்கிவரும் அங்கத்தினர்களுக்காக ஜெபிப்போம்.
- பலர் நம்மோடு இணைந்து ஆண்டவரை ஆராதிக்கவும், திருச்சபை புதிய வளர்ச்சி பெறவும் கருத்தாய் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள நமது சொந்த திருச்சபைக்காகவும், அதன் வளர்ச்சிக்காகவும், போதகர் குடும்பத்திற்காகவும், திருப்பணி வளர்ச்சிக்காகவும் ஜெபிப்போம்.
- இந்தியாவிலுள்ள பல திருச்சபைகள் BJP, RSS-னால் தாக்கப்பட்டு வருகிறது. தமிழகத்திலும் இந்த நிலை பெருகி வருகிறது. இறைமக்கள் விசுவாசத்தில் உறுதியாயிருக்க ஜெபிப்போம். துன்புறுத்துவோர் சந்திக்கப்பட மன்றாடுவோம்.

## திருப்பணிகளுக்கான மன்றாட்டு குறிப்புகள்:-

- நாம் தாங்கிவரும் 11 மிஷனெரிகளுக்காகவும், அவர்கள்தம் பணிக்களங்களில் செய்யும் அருட்பணிகளுக்காகவும், அவர்களது குடும்பங்களின் ஆசீர்வாதத்திற்காகவும் ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் நடைபெறும் எல்லா மிஷனெரி பணிகளுக்காகவும், பணித்தளங்களில் மிஷனெரிகள் சந்திக்கும் பிரச்சனைகளை அவர்கள் மேற்கொண்டு, தொடர்ந்து தைரியமாய் ஊழியம் செய்ய இறைபெலன் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.
- பணிக்களங்களில் அற்புத அடையாளங்கள் நிகழவும், அநேக புதிய குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொள்ளவும், புதிய புதிய திருச்சபைகள் பெருகவும் ஜெபிப்போம்.
- ஆலயங்கள் கட்டப்பட அனுமதி கிடைக்காமல் இருக்கிற திருச்சபைகளுக்காக கருத்தாய் ஜெபிப்போம்.
- வேதாகம சங்கத்தின் பணிகளுக்காக, தேவைகள் சந்திக்கப்பட ஜெபிப்போம்.
- தொழுகைகள் நடத்த இயலாமல் தடைபடுத்தும் மதவெறியர்களுக்காகவும் அவர்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**தேசத்துக்காக ஜெபிக்க:-**

- நமது இந்திய நாட்டுக்காகவும், ஆளுகை செய்கிறவர்களுக்காகவும் ஜெபிப்போம்.
- சிறுபான்மையினர் (இந்துக்களல்லாதவர்கள்) நசுக்கப்படுகிற நிலைமாற ஜெபிப்போம்.
- நமது தேசத்தில் உள்ள ஒவ்வொருவரும் கர்த்தரே தெய்வம் என்பதை அறிந்துகொள்ள ஜெபிப்போம்.
- ஓமான் தேசத்துக்காகவும், ஆளுகை செய்கிற தலைவர்களுக்காகவும், இங்கு இறைமக்கள் ஆண்டவரை மகிமைப்படுத்த தொடர்ந்து நல்ல சூழ்நிலை உருவாகவும் ஜெபிப்போம்.
- தீவிரவாதிகளால் உலகெங்கிலும் பதற்றம் ஏற்படுகிறது. இந்த நிலை மாற ஜெபிப்போம்.
- உலக நாடுகளுக்காகவும், உலக திருச்சபைகளுக்காகவும் ஜெபிப்போம். போர், வறுமை, தீவிரவாதம், இயற்கை பேரழிவு இவற்றினால் துயரப்படும் மக்கள் உள்ள எல்லா நாடுகளுக்காகவும் ஜெபிப்போம்.

நமது தேசத்தில் நடைபெற இருக்கின்ற நாடாளுமன்ற தேர்துலக்காக பாரத்தோடு ஜெபிப்போம். சிறுபான்மை மக்களுக்கு ஆதரவாக, சுவிசேஷத்திற்கு தடை செய்யாத, மதவாதம் மற்றும் இனவாதத்தால் நாட்டின் மக்களை பிரித்தாளாத நல்ல அரசு அமைந்திடவும், அனைத்து மக்களும் பணத்திற்காக வாக்குகளை செலுத்திடாமல் சுயமாக சிந்தித்து தங்கள் வாக்குகளை செலுத்தவும் அனைவரும் பாரத்தோடு ஜெபிப்போம்.

**குடும்பங்களுக்காக ஜெபிக்க:-**

- இந்த புதிய மாதத்தில் கர்த்தர் நம் ஒவ்வொருவரது குடும்பங்களையும் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.
- சிறுகுழந்தைகள், சிறுவர்கள், வாலிபர்கள், பெற்றோர், முதியோர் என எல்லாரும் ஆண்டவரது கிருபை பெற்றிட ஜெபிப்போம்.
- வியாதி, கடன், வேலைகளில் பிரச்சனை, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை, குழந்தையின்மை, வழக்குகள் இவற்றினால் கஷ்டபடுகிறவர்களுக்காக ஜெபிப்போம்.
- தீய பழக்கமுடையோரின் மனமாற்றத்துக்காக ஜெபிப்போம்.

கருவுற்றிருக்கிற சகோதரிகள் ஆரோக்கியமாயிருக்கவும், ஏற்றநாளில் நல்ல விடுதலைப்பெறவும் ஜெபிப்போம்.

**Birthday Celebrants – June 2019**

| | |
|---|---|
| 01st June | Mr. Sheeju Johnson |
| 02nd June | Master. Ronnie Robin Garwin, S/o Mr. Robin Raj |
| 02nd June | Mr. Arunpaul |
| 03rd June | Mr. Isaac Solomon |
| 04th June | Mr. M. Sujin |
| 05th June | Miss. Felyn Dannah, D/o Mr. Immanuel Prince |

| | |
|---|---|
| 05th June | Master. N. Jan Godwin, S/o Mr. Nethaji Jacob durai |
| 06th June | Mr. Anu |
| 06th June | Mrs. Geetha, W/o Mr. Rex Macedo |
| 10th June | Mr. Kingsly Paul |
| 10th June | Mrs. Aspin Mercilent Ethel, W/o Bejo |
| 12th June | Master. K. Allon Joshua, S/o Mr. Kanagavel |
| 16th June | Miss. Struana Sujith, D/o Mr. Sujith Gladson |
| 17th June | Mr. Daniel Raj |
| 20th June | Miss. Praylin Mathney, D/o Mr. Anto Kingston |
| 21st June | Miss. Oshin Kingsly Paul, D/o Mr. Kingsly |
| 22nd June | Mrs. Sheeba Sujith, W/o Mr. Sujith Gladson |
| 22nd June | Mr. J. Robin Devadhas |
| 22nd June | Miss. Bernice Gabrilla, D/o Mr. Robin Devadhas |
| 23rd June | Miss. Sharona Maceka, D/o Mr. Mohan Babu |
| 27th June | Mrs. Sathya Priya, W/o Mr. R. Ramesh |
| 27th June | Mr. Herbert Goldston |
| 27th June | Mr. V.N. Rajan |
| 27th June | Mrs. Leela Gladson |
| 29th June | Mrs. Divya Darling, W/o Mr. Kasi Raja |
| 29th June | Mr. Vimal Kumar Stephen |

## Wedding Day Anniversaries – June 2019

| | |
|---|---|
| 07th June | Mrs & Mr. Issac Solomon |
| 12th June | Mrs & Mr. David Prabhakaran |
| 16th June | Mrs & Mr. Atheesh Joy |
| 26th June | Mrs & Mr. Moorthy |
| 28th June | Mrs & Mr. Joel Gnanasekaran |

## இந்த மாத முக்கிய நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| 01-06-2019 | புதன் - அருணோதய ஆராதனை |
| | இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00 – 6:00 |
| 06-06-2019 | வியாழன் – இரவு ஜெபக்கூடுகை |
| | இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: இரவு 9:00 – 11:00 |
| 07-06-2019 | வெள்ளி- பரிசுத்த நற்கருணை ஆராதனை |
| | இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: மாலை 4:45 – 6:45 |

14-06-2019 வெள்ளி ஆராதனை

இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: மாலை 4:45 – 6:45

15-06-2019 சனி – உபவாச ஜெபக் கூட்டம்

இடம் : C.S.I. மலையாளம் ஹால் / காலை 10:30 – 1:00

20-06-2019 வியாழன் - பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை

இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: இரவு 9:00 – 11:00

20-06-2019 வியாழன் - ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை

இடம் : மார்த்தோமா ஹால் / நேரம்: இரவு 9:00 – 11:00

21-06-2019 வெள்ளி- பரிசுத்த நற்கருணை ஆராதனை

இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: மாலை 4:45 – 6:45

28-06-2019 வெள்ளி ஆராதனை

இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: மாலை 4:45 – 6:45

01-07-2019 திங்கள் - அருணோதய ஆராதனை

இடம் : மார்த்தோமா ஹால்/ அதிகாலை 5:00 – 6:00

04-07-2019 வியாழன்– இரவு ஜெபக்கூடுகை

இடம் : C.S.I. மலையாளம் ஹால் / நேரம்: இரவு 9:00 – 11:00

## அனுதின மன்னா – ஜுன் 2019

ஒவ்வொரு நாளும் வாசிக்கிறதற்காக ஒரு திருமறைப்பகுதி ஒவ்வொரு நாளுக்கும் தரப்பட்டுள்ளது, வாசித்து தியானித்து பயனடையுங்கள். குடும்ப ஜெபத்திற்கு இந்த பகுதியை பயன்படுத்துங்கள்.

| தேதி | நாள் | திருமறைப்பாடம் | அனுதின மன்னா | ஓராண்டில் திருமறை |
|---|---|---|---|---|
| ஜுன் 1 | சனி | நீதிமொழிகள் 4:1-27 | நீதி. 4:11 | யோபு 35-38 அதிகாரங்கள் |
| ஜுன் 2 | ஞாயிறு | நீதிமொழிகள் 1:1-33 | நீதி 1:8 | யோபு 39-42 அதிகாரங்கள் |
| ஜுன் 3 | திங்கள் | ரோமர் 15:1-21 | ரோமர் 15:4 | சங்கீதம் 1-7 அதிகாரங்கள் |
| ஜுன் 4 | செவ்வாய் | 1தீமோத்தேயு 4:1-16 | 1தீமோ. 4:6 | சங்கீதம் 8:14 அதிகாரங்கள் |
| ஜுன் 5 | புதன் | எபிரெயர் 13:18-25 | எபிரெயர் 13:19 | சங்கீதம் 15-18 அதிகாரங்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| ஜுன் 6 | வியாழன் | நீதிமொழிகள் 13:1-25 | நீதி. 13:14 | சங்கீதம் 19-24 அதிகாரங்கள் |
| **ஜுன் 7** | **வெள்ளி** | **நீதிமொழிகள் 19:1-29** | **நீதி 19:27** | **சங்கீதம் 25-30 அதிகாரங்கள்** |
| ஜுன் 8 | சனி | ரோமர் 8:1-17 | ரோமர் 8:16 | சங்கீதம் 31-35 அதிகாரங்கள் |
| ஜுன் 9 | ஞாயிறு | மத்தேயு 6:25-32 | மத்தேயு 6:26 | சங்கீதம் 36-39 அதிகாரங்கள் |
| ஜுன் 10 | திங்கள் | அப். 17:22-31 | அப். 17:27 | சங்கீதம் 40-45 அதிகாரங்கள் |
| ஜுன் 11 | செவ்வாய் | 2தீமோத்தேயு 4:1-8 | 2தீமோ. 4:5 | சங்கீதம் 46-50 அதிகாரங்கள் |
| ஜுன் 12 | புதன் | மாற்கு 6:30-44 | மாற்கு 6:42 | சங்கீதம் 51-57 அதிகாரங்கள் |
| ஜுன் 13 | வியாழன் | மத்தேயு 16:13-17 | மத். 16:16 | சங்கீதம் 58-65 அதிகாரங்கள் |
| **ஜுன் 14** | **வெள்ளி** | **அப். 4:11-20** | **அப். 4:20** | **சங்கீதம் 66-69 அதிகாரங்கள்** |
| ஜுன் 15 | சனி | யோவான் 13:23-35 | யோவான் 13:34 | சங்கீதம் 70-73 அதிகாரங்கள் |
| ஜுன் 16 | ஞாயிறு | எரேமியா 15:10-21 | எரேமியா 15:19 | சங்கீதம் 74-77 அதிகாரங்கள் |
| ஜுன் 17 | திங்கள் | மத்தேயு 20:1-16 | மத்தேயு 20:16 | சங்கீதம் 78-79 அதிகாரங்கள் |
| ஜுன் 18 | செவ்வாய் | மத்தேயு 18:1-10 | மத்தேயு 18:10 | சங்கீதம் 80-85 அதிகாரங்கள் |
| ஜுன் 19 | புதன் | யோவான் 14:1-7 | யோவான் 14:1 | சங்கீதம் 86-89 அதிகாரங்கள் |
| ஜுன் 20 | வியாழன் | மாற்கு 4:35-41 | மாற்கு 4:40 | சங்கீதம் 90-95 அதிகாரங்கள் |
| **ஜுன் 21** | **வெள்ளி** | **லூக்கா 6:27-36** | **லூக்கா 6:35** | **சங்கீதம் 96-102 அதிகாரங்கள்** |
| ஜுன் 22 | சனி | யோவான் 15:12-16 | யோவான் 15:14 | சங்கீதம் 103-105அதிகாரங்கள் |
| ஜுன் 23 | ஞாயிறு | எபிரெயர் 8:7-13 | எபிரெயர் 8:10 | சங்கீதம் 106-107அதிகாரங்கள் |
| ஜுன் 24 | திங்கள் | மத்தேயு 8:5-13 | மத்தேயு 8:10 | சங்கீதம் 108-114அதிகாரங்கள் |
| ஜுன் 25 | செவ்வாய் | மாற்கு 12:41-45 | மாற்கு 12:44 | சங்கீதம் 115-118அதிகாரங்கள் |
| ஜுன் 26 | புதன் | மத்தேயு 9:35-38 | மத்தேயு 9:36 | சங்கீதம் 119 |
| ஜுன் 27 | வியாழன் | லூக்கா 8:41-48 | லூக்கா 8:48 | சங்கீதம் 120-125அதிகாரங்கள் |
| **ஜுன் 28** | **வெள்ளி** | **மத்தேயு 5:23-26** | **மத்தேயு 5:25** | **சங்கீதம் 126-132அதிகாரங்கள்** |
| ஜுன் 29 | சனி | மத்தேயு 9:9-13 | மத்தேயு 9:13 | சங்கீதம் 133-139அதிகாரங்கள் |
| ஜுன் 30 | ஞாயிறு | மத்தேயு 11:25-30 | மத்தேயு 11:28 | சங்கீதம் 140-145அதிகாரங்கள் |
| ஜுலை 1 | திங்கள் | லூக்கா 15:1-7 | லூக்கா 15:7 | சங்கீதம் 146-150அதிகாரங்கள் |
| ஜுலை 2 | செவ்வாய் | லூக்கா 7:11-17 | லூக்கா 7:13 | **நீதி. 1-3 அதிகாரங்கள்** |
| ஜுலை 3 | புதன் | எரேமியா 18:1-10 | எரேமியா 18:4 | நீதி. 4-6 அதிகாரங்கள் |
| ஜுலை 4 | வியாழன் | 1சாமுவேல் 16:4-12 | 1சாமு. 16:7 | நீதி. 7-9 அதிகாரங்கள் |
| ஜுலை 5 | வெள்ளி | மத்தேயு 5:38-42 | மத்தேயு 5:39 | நீதி. 10-12 அதிகாரங்கள் |

# ஆராதனை ஒழுங்குகள்

| | |
|---|---|
| முதல் மற்றும் மூன்றாம் வெள்ளி | பரிசுத்த நற்கருணை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டு, நான்கு மற்றும் ஐந்தாம் வெள்ளி | மாலை ஆராதனை<br>நேரம் : மாலை 4:45 – 6:45<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| முதல் வியாழன் | இரவு ஜெபக் கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| இரண்டாம் சனி | உபவாச ஜெபக் கூடுகை<br>நேரம் : காலை 10:30 – 1:00 |
| மூன்றாம் வியாழன் | பெண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : **C.S.I.** மலையாளம் ஹால் |
| மூன்றாம் வியாழன் | ஆண்கள் ஐக்கிய சங்க கூடுகை<br>நேரம் : இரவு 9:00 – 11:00<br>இடம் : மார்த்தோமா ஹால் |

திருமறை பள்ளி வகுப்புகள் - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 4:45 முதல் 5:45 மணி வரை நடைபெறும்.

பாடகர் குழு பயிற்சி - எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் மாலை 7:00 முதல் 8:00 மணி வரை நடைபெறும்


**Contact: RevDr. N. Jesin**
**GSM : 9693 3489**
**Land Line : 2470 5784**
**E-mail :pastor@csitamilchurchoman.org**
**Website: www.csitamilchurchoman.org**



**(For Private Circulation Only)**